ICCM-2015

# PROCEEDINGS

## 2nd International Conference on Contemporary Management

"Driving Productivity through Knowledge & Innovation"

Faculty of Management Studies and Commerce
University of Jaffna, Sri Lanka
11th & 12th , June, 2015

**2nd International Conference on Contemporary Management (ICCM)-2015**

©Copy Right 2015 Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka

Published by: Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka

| | | |
|---|---|---|
| URL | : | www.jfn.ac.lk/iccm |
| e-mail: | : | iccmuoj@gmail.com |
| T.P | : | 0094(0)212223610 |
| Printers | : | Guru Printers Thirunelvely, Jaffna. |

**ISSN:** : ISSN 2448-9883

**Disclaimer:**

Responsibilities for content of the full papers included in the publication remain with respective authors.

Proceeding of International Conference on Contemporary Management - 2015 (ICCM-2015), pp 175-182

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் ஈழத்து சைவ மரபில் ஏற்படுத்திய தாக்கம்- ஓர் ஆய்வு.

தி.செல்வமனோகரன்


## ஆய்வுச் சுருக்கம்

ஈழத்து சைவ மரபு தனக்கான தனித்துவ பாரம்பரியத்தையுடையது. ஆறுமுக நாவலரின் மரணத்தின் பின் நிகழ்ந்த சுவாமி விவேகானந்தரின் வருகை மற்றும் அவரது கருத்தியல் ஈழத்துச் சைவ மரபில் எத்தகைய தாக்கத்தைச் செலுத்தியது என்பதையும் மிண்டிய மாயாவாதம் என மறுக்கப்பட்ட வேதாந்தத்தைப் பேசிய விவேகானந்தர் எவ்வாறு ஈழத்துச் சைவ மரபினரிடம் இன்றுவரை செல்வாக்குச் செலுத்துகின்றார் என்பதையும் இக்கட்டுரை ஆய்வுக்குட்படுத்துகிறது.


**திறவுச் சொல் :** ஈழத்துச் சைவ மரபு, சுவாமி விவேகானந்தர், வேதாந்தம், நடத்தையியல், கருத்தியல்,

## 1.1 ஈழத்துச் சைவ மரபு

ஈழத்தின் தொன்மை வாய்ந்த சமயமாகவும், மெய்யியலாகவும் சைவம் திகழ்கின்றது. தேவநம்பிய தீசன் காலத்திலேயே பௌத்தம் இலங்கைக்கு வந்தது என மகாவம்சத்தை முன்வைத்து இலங்கை வரலாறு எழுதிய அனைவரும் ஒத்துக் கொள்கின்றனர். அந்த வகையில் ஈழத்தின் தொன்மை மரபு சைவம் என்றாகிறது. விநாயகர், வைரவர், சக்தி, முருகன் எனப் பல தெய்வங்கள் வழிபடப்பட்டாலும் பாசுபதம், வீரசைவம் முதலான பல சைவப்பிரிவுகள் காணப்பட்டாலும் அவை யாவும் ஈழத்தில் சைவம் என்னும் சொல்லாலேயே சுட்டப்பட்டன. அதிலும் குறிப்பாக சைவ மெய்யியலாக சைவசித்தாந்தமே சுட்டப்பட்டது. பல்வேறுபட்ட சமயப் பிரிவுகள், சிந்தனை மாற்றங்கள் பல வந்தவிடத்தும் அவை சைவத்தால் உள்ளீர்க்கப்பட்டு சைவமாகவே சுட்டப்பட்டன. பாரசீகர்களால் எடுத்துரைக்கப்பட்டு ஆங்கிலேயரால் இந்திய சமய தத்துவங்களை சுட்டப்பயன்படுத்தப்பட்ட "இந்து" என்னும் சொல் Hindu என ஆங்கிலத்தில் பயன்படுத்தப்பட்டாலும் சைவம் என்ற சொல்லே ஈழத்தில் பெரும்பான்மையாகப் புழக்கத்தில் இருக்கின்றது. உதாரணமாக Hindu Board Of Education என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும் நிறுவனம் (1923) தமிழில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் என வழங்கப்படுவதையும் தரம் 11 வரையான பாடநூல் சைவநெறி என வழங்கப்படுவதையும் சுட்டலாம்.

ஈழத்துச் சைவ மரபு என இங்கு சுட்டப்படுவது சமயம், மெய்யியல் எனும் இருதளக் கூறுகளையும் இணைத்த நிலையையே ஆகும். பாரம்பரிய சடங்கு சம்பிரதாயங்கள், வழிபாட்டு முறைகள் உள்ளிட்ட அனைத்து அம்சங்களும் உள்ளடங்கியதாகவே இங்கு இச்சொற்றொடர் எடுத்தாளப்படுகிறது.

இவ்வீழத்து வைதீக சைவம் தனித்த சிவ வழிபாடாக இல்லாது பல தெய்வங்களை உள்ளடக்கியதாய், ஆனால் அவற்றை சிவத்துள் சைவ மரபினுள் உள்ளடக்கியதாய் அமைந்து காணப்படுகின்றது. ஆகமமயப்பட்ட, ஆகமமயப்படாத பல்வேறு சடங்குகளும் வழிபாட்டு முறைகளும் இங்கு காணப்படுகின்றன. மெய்யியல் மரபில் வைதீக சைவ சித்தாந்தமே எழுச்சி பெற்றதாகக் காணப்படுகின்றது. இதர மெய்யியல்கள் செல்வாக்குற்று நிலவியதற்கான ஆதாரங்கள் அருகியே காணப்படுகின்றன. வேதாந்தமும் அதற்கு விதி விலக்கல்ல.

1899இல் ஆறுமுக நாவலரின் மரணம் நிகழ்ந்து விடுகின்றது. ஈழத்து சைவரின் தன்னிகரில்லாத தலைவராக மதிக்கப்பட்ட அவருடைய மரணம் ஈடுசெய்ய முடியாத தலைமைத்துவ வெற்று வெளியை ஏற்படுத்தி விடுகிறது. சார்ஜண்ட் சுவாமிகளின் ஊடாக வேதாந்த மரபும் உற்பவிக்கிறது. கிறிஸ்தவர்களின் மதமாற்றச் செயற்பாட்டை தடுக்கவோ அன்றி அவர்களின் சைவம் சம்பந்தமான கருத்துக்களையும் கண்டனங்களையும் நிராகரித்துக் கண்டன கண்டனவுரை நிகழ்த்தவும் முடியாமல் போயிற்று. அந்த சூழலில்தான் சுவாமி விவேகானந்தரின் எழுச்சி சர்வதேச அரங்கில் நிகழ்கிறது. அவ்வலை ஈழம் தொட்டு பிரித்தானியா

வருகை விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்களகம்

வரை பரவிற்று..

### 1.2 சுவாமி விவேகானந்தர்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றிய ஆன்மீகத் தலைவர்களுள் முதன்மையானவராகச் சுவாமி விவேகானந்தர் திகழ்கின்றார். நவ பாரதத்திற்குரிய நவதத்து வத்தை முன்மொழிந்தவராக இவர் சித்திரிக்கப்படுகின்றார். கல்கத்தா எனும் ஊரில் விஸ்வநாத தத்தருக்கும் புவனேஸ்வரிக்கும் மகனாக 1863இல் ஜனவரி 12 அன்று பிறந்த இவர் 39 ஆண்டுகள் வாழ்ந்து பல்வேறு பணிகளைப் புரிந்தார். இவரின் இயற்பெயர் நரேந்திரநாதர் என்பதாகும்.

தஷிணேஸ்வரில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரைச் சந்திக்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. அவரிடம் "கடவுளைப் பார்த்திருக்கிறீர்களா?" என வினாவினார். "ஆம், நான் உன்னைப் பார்ப்பது போல இன்னும் தெளிவாக, நெருக்கமாகக் கடவுளைப் பார்த்திருக்கிறேன்." என்ற இராமகிருஷ்ண பரமஹம்சரின் பதில் நரேந்திரனின் வாழ்க்கைத் தடத்தையே மாற்றியது.

சுவாமி விவேகானந்தர் இலங்கைக்கு இரு தடவைகள் வருகை தந்துள்ளார். சிக்காக்கோ மாநாட்டிற்குச் செல்லும் போது 1893இல் கொழும்புக்கு வந்துள்ளார். அது அவர் யாரென மக்கள் அறிந்திராத காலம் சர்வமத சபையில் உரையாற்றிப் புதிய சரித்திரம் படைத்து பெரும் புகழ் அடைந்த காலத்தில் இந்தியாவிற்கு திரும்புகையில் 1897.01.15 அன்று மீள வருகை தந்துள்ளார். பல்லாயிரம் இந்துக்கள் கூடிப் பெரு விழா எடுத்து வரவேற்றனர். யாழ்ப்பாணத்திற்கும் வருகை தந்து வேதாந்தம் பற்றி உரையாற்றினார்.

இவ்வாறான வரலாற்றைப் பார்க்கும் போது பல கேள்விகள் நம்முள் எழுந்து நிற்கின்றன.

- சங்கர வேதாந்தத்தை மாயாவாதம் என மறுப்பதில் காலங்காலமாக மகிழ்வு கண்ட ஈழத்துச் சைவர், வேதாந்தியான சுவாமி விவேகானந்தரின் வருகையை எவ்வாறு ஏற்றுக் கொண்டனர்.

- ஆகம மயப்பட்ட சிந்தனாவாதியான ஆறுமுக-நாவலரின் சைவவாரிசுகள் விவேகானந்தரை மாலையிட்டு வரவேற்க முன்னின்றமை ஏன்?

- சைவபரிபாலன சபைப் பத்திரிகைகளான இந்து சாதனம், Hindu Organ ஆகியன சுவாமி விவேகானந்தரை உதய சூரியனாக பாராட்டியமையும் அவரின் வருகை மற்றும் உரைகள் என்பவற்றிற்கு அதிக முக்கியத்துவத்தை அளித்தமை ஏன்?

மிண்டிய மாயாவாதம் எனக்கூறி வேதாந்தத்தை நிராகரணம் செய்து ஆகமமயப்பட்ட சைவமறுமலர்ச்சி நடைபெற்ற அதே கால கட்டத்தில் நாவலர் மறைந்த சொற்ப காலத்தில் வேதாந்தி ஒருவரின் வருகை பற்றி நாவலரின் கனவை நனவாக்க எழுந்த இந்து சாதனப் பத்திரிகையில் பின்வருமாறு வர்ணிக்கப்பட்டுள்ளது.

"பல்லாயிரக் கணக்கான மக்கள் புடை சூழ மேளவாத்திய கோசங்கள் எல்லா திசைகளும் முழுங்க இரு குதிரைகள் பூட்டிய வண்டியின் மீது அமர்ந்து இந்து கல்லூரியில் தயார் செய்யப்பட்டு இருந்த அலங்கார மேடைக்குச் சுவாமி விவேகானந்தர் எழுந்தருளிய போது பெரிய கடை முதல் கல்லூரி வரையில் செய்யப்பட்டு இருந்த வீதி அலங்காரம் அம்மம்மா! எம்மால் சொல்லத்தக்கதன்று. எங்கே பார்த்தாலும் தோரணங்கள்! எங்கே பார்த்தாலும் பூரண கும்பங்கள்!

ஈழத்து சைவ சித்தாந்திகள் இவ்வாறு வேதாந்திக்கு மிக்க விருப்போடு பெரு வரவேற்பு அளித்தது ஏன்? இவ்வாறான கேள்விகள் காலகாலமாக பலரிடம் இருந்து வந்த போதிலும் வெளிப்படையான உரையாடல்கள் நிகழவில்லை என்றே கூறவேண்டும். இக்கேள்விகளோடு தொடர்புபடுத்திப் பின்வருவனவற்றைச் சிந்திக்கலாம்.

·நாவலரின் பேரிழப்பும் தலைமைத்து வமற்று நின்ற ஈழத்துச் சைவமரபும்.

·கிறிஸ்தவ மிஷனரிகள் சுவாமி விவேகானந்தருக்கு எதிரான கட்டுரைகள், துண்டு பிரசுரங்களை வெளியிட்டமை.

·சர்வ தேசிய ரீதியில் இந்து சமயத்தை பிரபல்யப்படுத்தியமையும் அதற்கு கிடைத்த அங்கீகாரங்களும்.

சுவாமி விவேகானந்தரின் சமயம், தத்துவம் தாண்டிய ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் நடைமுறை வேதாந்தவியற் கருத்துக்களும் செயற்றிறனும்.

ஈழத்து சைவ மறுமலர்ச்சியின் தந்தையாகவும் தேசிய வீரராகவும் மதிக்கப்படுகின்ற ஆறுமுக நாவலரின் மறைவு பேரிழப்பாயிற்று. அவரின் தலைமைத்துவ செயற்பாட்டுக்கு ஈடான செயற்பாட்டை உடைய தலைவரை உடன டியாக இனம் காண முடியவில்லை. இதனால் ஈழத்துச் சைவர்கள் பலர் இணைந்து சைவ பரிபாலன சபையை உருவாக்கி அதனூடாக சைவப் பணியை முன்னெடுக்க முற்பட்டனர். ஆறுமுக நாவலர் தமது காலத்தில் கொடுத்த உந்துவிசை அவர் மறைந்த பின்பும் சிறிது காலத்திற்கு அதே செல்நெறியில் ஈழத்துச் சைவர்கள் செல்ல வழிசமைத்தது. ஆயினும் கிறிஸ்தவ மிஷனரிகளின் தீவிர செயற்பாடுகள் ஈழத்துச் சைவ சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முனைந்தன.

இக்கால கட்டத்திலே தான் சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ சர்வமத மகா சபையில் உரையாற்றிப் புகழ் பெறுகின்றார். இதனைப் பொறுக்கமாட்டாத கிறிஸ்தவர்களின் உதயதாரகைப் பத்திரிகை விவேகானந்தருக்கு எதிராகப் பல அவதூறுகளை வெளியிட்டது. இக்காலகட்டத்தில் தான் இந்து சாதனம் Hindu Organ ஆகிய பத்திரிகைகள் சுவாமி விவேகானந்தரை முதன்மைப்படுத்தத் தொடங்கின. இந்து சாதனம் அவரது உரைகளையும் அவர் பற்றி அமெரிக்க அறிஞர் "மெஸ்டர்மேர்வின் மேரிஸ் நெல்" என்பார் அமெரிக்க "ப்யோனியர்ப்" பத்திரிகைக்கு எழுதியதை மொழிபெயர்த்தும் வெளியிட்டது. உதயதாரகையின் தூஷிப்புக் களுக்கு எதிராகக் கண்டனங்களையும் வெளியிட்டது. இவ்வாறு சுவாமி விவேகானந்தரை ஆதரித்து கிறிஸ்தவர்களுடன் பெரும் கருத்துப் போரையே இந்து சாதனம் நடாத்தியது.

உலகம் எங்கும் இந்து மதம் பற்றிய கருத்துக்கள் பரவின. பல அமெரிக்கர்களும் இங்கிலாந்து நாட்டவர்களும் இந்து சமயிகள் ஆன தாகவும் இந்து சமயம் பற்றி அறிய ஆவலாயினர் என்றும் இந்து சாதனம் செய்தி வெளியிட்டது.

இவ்வாறன செய்திகள் ஈழத்துச் சைவர்களிடம் அவருக்கு நன்மதிப்பை ஏற்படுத்தின. கிறிஸ்தவர்களின் எதிர்ப்பும் கண்டனமும் விவேகானந்தரை ஈழத்து சைவர்கள் ஆதரிக்க ஏதுவாயிற்று. அத்தோடு ஒட்டுமொத்த அவர் இந்தியப் பாரம்பரியத்தை பேசுபவராகவும் பெரு மைப் படுத்துபவராகவும் அதன் பிரதிநிதியாகவும் அடையாளப்படுத்தப்பட்டார். சமய தத்துவ பிரிவினைகளைத் தாண்டி அவற்றின் தொன்மை, ஒருமைப்பாடு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட தேசியமாகத் திகழ்ந்தது அவரின் கருத்துக்கள் என்றார் பொன் பூலோகசிங்கம்.

யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவர்கள் விவேகானந் தரின் செல்வாக்கை நலிவுறச் செய்ய வேதாந்த சித்தாந்த வேறுபாட்டை எடுத்துரைத்தனர். ஆனால் அதனைத் தாண்டி விவேகானந்தர் அனைத்து சமயங்களும் சமமானவை, அனைத்துத் தத்துவங்களும் சமமானவை என்றும் இந்து சமய, தத்துவங்கள் யாவும் தாழ்வற்றவை மேலைத்தேய சமயதத்துவங்களுக்கு நிகரானவை – மேம்பட்டவை என்றும் உரைத்து நின்ற சர்வதேசிய சிந்தனை அவ்வேதாந்தியின் வருகையை ஈழத்தில் சாத்தி யமாக்கியது. இதனைக் கொழும்பு, யாழ்ப்பாண நகரங்களில் படித்தளிக்கப்பட்ட வரவேற்புரைகளின் ஊடாக அறிய முடிகின்றது.

இக்காலகட்டத்தில் தான் தமிழகத்து பிரம வித்தியா, விவேக திவாகரன், நீலலோசினி, ஞானமிர்தம் முதலான பத்திரிகைகள் வேதாந்த சித்தாந்த வேறுபாட்டை எடுத்துரைத்து விவேகானந்தரின் வருகையைத் தாக்கி எழுதின. இவற்றை நிராகரித்து இந்து சாதனம் வேதாந்த தெளிவே சைவசித்தாந்தம் என்னும் உமாபதி சிவாச்சாரியரின் கருத்தின் சாரப்படக் கருத்துக்களை வெளியிட்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் விவேகானந்தர் ஆற்றிய உரையில்,

"வேதத்தின் சாரம் தான் வேதாந்தம் எனப்படுவது. வேதாந்தத்தில் உபநிடதங்கள் அடங்கியிருக் கின்றன. இந்து மதத்திலுள்ள எல்லாப் பிரிவினர் களும் துவைதிகள் விசிஷ்டாதுவைதிகள் அல்லது அத்வைதிகள், சைவர்கள், வைஷ்ணவர்கள், சாக்தர்கள், சௌரர்கள் அல்லது கணபதியர்கள் முதலிய அனைவரும் உபநிடதங்களின் அதி காரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். தங்கள் விருப்பம் போல் அவைகளுக்குப் பொருள் செய்து கொள்ளலாம்; ஆனால் அவைகளின் அதிகாரத்தை ஏற்றுத்தானாக வேண்டும். இதன் காரணமாகத்தான் இந்து என்பதற்குப் பதிலாக வேதாந்திகள் என்று

தம்மை அழைத்துக் கொள்ளலாம் என்று நாம் சொல்லுகிறோம். நம்முடைய ஆசாரியர்கள் அனைவரும் வேதாந்தத்தின் அதிகாரத்தை ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள். நாம் தற்கால மத ஆசாரங் களின் ஆரம்பம் அனைத்தும் உபநிடதங்களில் இருப்பதை நன்கு கற்றவர்கள் உணர்வார்கள். உபநிடதங்கள் நம்மக்கள் மனதில் மிக ஆழ்ந்து பதித்திருக்கின்றன. நம்மிடமுள் சில குரூரமான அனுஷ்டானங்கள் கூட உபநிடதங்களின் உண்மை களை உருவகங்களின் மூலம் ஸ்தூலமாக வெளிப்படுத்தச் செய்த முயற்சிகளாக விருக்கின்றன". என உரைத்துள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது.

இதனை நுண்ணாய்வு செய்த பேராசிரியர். க. கைலாசபதி தனது விவேகானந்தரின் ஈழத்து வருகை தொடர்பான ஆங்கிலக் கட்டுரையில்,

"சுவாமி விவேகானந்தரின் போதனைகளையும் இராமகிருஷ்ண இயக்கத்தின் செய்தியையும் இலங்கைத் தமிழ் இந்துக்களை வேதாந்தத்தை ஒப்புக் கொள்ளச் செய்யவிட்டாலும் பெரும்பாலோரின் குறுகிய நோக்கையும் கொள்கை பிடிவாதத்தையும் தளரச் செய்தது."

என்கின்றார். அத்வைத வேதாந்தத்தை ஈழத்து சைவர்கள் பெரிதும் ஒத்துக் கொள்ளவில்லை. மேற்படி விவேகானந்தரின் உரையின் நீட்சியாகத்தான் நாவலர் மரபினரான காசிவாசி செந்திநாதையரின் சைவ வேதாந்தம், தேவாரம் வேதாச்சாரம், முதலான நூல்கள் தோற்றம் பெற்றன. சைவ வேதாந்தம் உபநிடதங்களை (வேதாந்தம்) முதன்மைப் படுத்துகின்றது. தேவாரக் கருத்துக்களின் வேர்களை வேதத்தில் இனம் காணும் முயற்சியே தேவாரம் வேதசாரம் என்னும் நூல் ஆகும். ஆயினும் வேதாந்தச் செல்வாக்கு யாழ்ப்பாணச் சைவர்களிடையே ஓரளவேனும் ஏற்பட்டது என்றே கூறவேண்டும். வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைக்கு எடுத்துக்காட்டாக விவேகானந்தரை நேரிற் தரிசித்த யோகர் சுவாமிகளின் பாடல்கள் விளக்குகின்றன. உமாபதி சிவாச்சாரியாரின் சிவபுண்ணியத் தெளிவு என்னும் நூலினை முன்வைத்து விவேகானந்தரின் உரைகளோடு சித்தாந்த சமரசத்தை இந்து சாதனம் முன்வைத்தது. சித்தாந்தியும் ஆறுமுகநாவலரின் வாரிசுமான சேர். பொன் இராமநாதன் பகவத்கீதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார் தமிழில் உரை எழுதினார். சைவ சித்தாந்தத்தை ஆங்கிலத்தில் எழுதிய முத்துக்குமார சுவாமியவர்கள் வேதபந்த சித்தாந்த சமரசம் பேசிய தாயுமானவர் பாடல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இவ்வாறான மாற்றங்கள் கவனத்திற்குரியவையாகின்றன.

### 3. விவேகானந்தரின் வழி உருவான நிறுவனங்கள்

1902 ஆம் ஆண்டளவில் கொழும்பு விவேகானந்த சபை ஆரம்பிக்கப்பட்டது "விவேகானந்தன்" பத்திரிகை 1925 இல் வெளியிடப்பட்டது. சுவாமி விபுலானந்தரே இதன் ஆசிரியர். கிழக்கிலங்கையில் இராம கிருஷ்ண மிஷனரியின் செயற்பாடுகள் அதீத செல்வாக்கைப் பெற்றன. இராமகிருஷ்ண மிஷன் துறவியாக சுவாமி விபுலானந்தர் விளங்குகினார். கிழக்கிலங்கை சுட்டிப்பாக மட்டக்களப்புப் பிரதேசம் தமிழர் சுதேசிய வழிபாட்டில் - ஆகமம் சாரா கிராமிய வழிபாட்டுக்கு இற்றைவரை பெயர் பெற்ற பிரதேசமாகும். இங்கு 1924ஆம் ஆண்டளவில் மயில்வாகனன் என்பவர் சுவாமி விபுலானந்தராகத் துறவு பூண்டார். அவர் அவ்வாண்டளவில் தோற்றம் பெற்ற கிழக்கு இலங்கை இராமகிருஷ்ண மிஷனை 1925 இல் பெறுப்பேற்றுக் கொண்டார். தமிழக இராமகிருஷ்ண மடத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம் (தமிழ்) வேதாந்த கேசரி ( ஆங்கிலம் ) ஆகியவற்றின் ஆசிரியராகவும் கடமை யாற்றியுள்ளார். சாரதா வித்தியாலயம், சிவானந்த வித்தியாலயம் என்பன இவரது காலத்தில் கிழக்கு இலங்கையில் நிறுவப்பட்ட பாடசாலைகளாகும். வேதாந்தமடத் துறவியான இவர் கண்டி சைவ மகா சபையின் ஆண்டு விழா (1927) திருவண்ணாமலை சைவ சித்தாந்த மகா சமாசத்தின் மாநாடு (1935) என்பவற்றிற்குத் தலைமை ஏற்று உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்திலும் கல்விப் பணிபுரிந்த சுவாமி விபுலானந்தர் ஒரு வேதாந்தத் துறவியாக முதன்மைப்படுத்தப்பட்டதை விட முத்தமிழ் வித்தகராகவே மதிக்கப்படுகின்றார் என்பது மனங்கொள்ளத்தக்கது.

இராமகிருஷ்ண மிஷன்கள் பல இலங்கை பூராகவும் தோற்றம் பெற்றன. அவை பேதமற்ற "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" எனும் விவேகானந்தரின் குரலை ஓங்கி ஒலித்தன. கல்வி, அநாதை சிறுவர் இல்லங்கள், ஆதரவற்றோருக்கு உண்டியும் தங்க இடமும் அளித்தல் எனப் பல சமூகப் பணிகளைச் செய்தன. யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்ற பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை முதலானோர் வேதாந்தம் என்பதை உபநிடதமாகவே கருதினர். வேதாந்த தெளிவாம்

சைவசித்தாந்தம் எனும் தலைப்பில் பல கட்டுரைகளை பண்டிதமணி எழுதினார். இதனூடாகச் சைவ சித்தாந்திகள் சங்கர வேதாந்தம் யாழ்ப்பாணத்தில் பரவுவதை தடுக்க முற்பட்டனர். பண்டிதமணியின் அத்வைத சிந்தனை எனும் நூல் சைவசித்தாந்த நோக்கில் அத்வைதத்திற்கு விளக்கம் அளிக்கின்றது.

ஈழத்துச் சைவப் பாரம்பரிய நாவலர் மரபினரான பண்டிதமணி சிவசங்கர பண்டிதர் பற்றிய நூலுக்கான அணிந்துரையில் பின்வருமாறு கூறியுள்ளமை கவனத்திற்குரியதாகும்.

"சங்கரர் மிகமிகக் கூரிய விவேகமும் தங்கருத்தைத் தருக்கித்துத் தெரிக்கும் பேராற்றலும் படைத்தவர். அவர் தமது பிரம சூத்திரபாடிகத்திலே, பௌத்தம் முதலிய மதங்களைக் கண்டித்து ஏகாத்தும மதத்தை நிலைநாட்டியிருக்கின்றார். சிவஞான முனிவர் தமது சிவஞானபோத மாபாடிகத்திலே, சங்கரர் நாட்டிய ஏகாத்தும வாதத்தையும் ஏனைய மதங்களையும் மறுத்து, "சான்றவர் ஆய்ந்திடத் தக்க ஆம்பொருள் மூன்றுள" என்று கந்தபுராணத்தில் விதந்தோதிய, திரிபதார்த்தங்களை நிச்சயஞ் செய்யும் வைதிக சைவ சித்தாந்தத்தை நிலை நாட்டியிருக்கின்றார்."

சங்கர பாடியத்துக்கு வழி நூல் சார்பு நூல்களாகப் பல நூற்றுக்கணக்கான நூல்கள் தருக்க வியாகரணங்களிலும் பிரஸ்தானத் திரயங்களிலும் வல்லோர்கள் பலரால் வட மொழியிலும் தென் மொழியிலும் வேறு மொழிகளிலும் செய்யப்பட்டுச், சங்கரமதம் உலகப் பிரசித்தியடைகின்றது.

இக்கூற்றில் சங்கரரை உயர்வுபடக் கூறுகின்ற அதேவேளை, அவர் நாட்டிய ஏகாத்தும வாதத்தை சிவஞான முனிவர் மறுத்துரைத்த திறனை விதந்துரைப்பதும் சங்கர வேதாந்தத்திலும் சைவ சித்தாந்தமே சிறந்தது எனச் சூசகமாக நிலைநாட்ட முற்பட்டமையையும் ஈழத்து சைவ மரபினரின் மனநிலையைத் தெளிவுபடுத்துகிறது.

அதேவேளை 1923இல் சேர்.பொன். இராமநாதன் தலைமையில் உருவான சைவ வித்தியா விருத்திச் சங்கம் சுவாமி விவேகானந்தருக்கும் வேதாந்தியான மகாதேவ சுவாமிகளுக்கும் முதன்மை கொடுத்துள்ளது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் வழி நின்று கல்விப் பணிபுரிய உருவான இந்நிறுவனம் தனது 1930ஆம் ஆண்டில் வெளியிட்ட அறிக்கையில் காந்தி, ஆறுமுக நாவலர் ஆகியோரின் கல்விக் கொள்கைகளோடு இணைத்து 'Swami Vivekananda on National Education' எனும் தலைப்பிலான கருத்தியலை இருபக்கங்களில் வெளியிட்டுள்ளமை அவரது கருத்தியல் செல்வாக்கைப் புலப்படுத் துகிறது. அதேவேளை நாவலரின் படத்தை மட்டுமே பிரசுரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஆரம்ப காலத்தில் இராமகிருஷ்ண மிஷனின் பணிகள் யாழ்ப்பாணத்தில் பெரிதும் வெற்றியளிக்கவில்லை.

ஈழத்து சைவர்களிடம் மாயாவாத வேதாந்தம் பெரியளவில் செல்வாக்குப் பெறவில்லை. வேதாந்த மடப் பாரிய மரபுகள் ஈழத்தில் தோற்றம் பெற்று இற்றை வரை காணப்படுகின்றன. இவை வேதாந்த மரபை பரப்பின என்பதை விட, சைவ மரபையே பரப்பியும் பேணியும் வந்துள்ளன. கடையிற் சுவாமி தொட்டு யோகர் சுவாமிகள் வரை சைவ தடத்த நிலைச் சிவத்தின் வழிபாட்டாளர்களே. சார்ஜண்ட் சுவாமிகள் தொட்டு வடிவேற் சுவாமிகள் மற்றும் அவரின் சீடர் பரம்பரை ஈறாக சிவானுஷ்டானத் திலும் தேவார திருவாசகங்களை ஓதுவதிலும் சிறந்து விளங்கியதாக அறிய முடிகின்றது. ஈழத்து இராமகிருஷ்ண மிஷன்களும், விவேகானந்த சபையும் சைவ நூல்களை, நாவலர் முதலானோரின் நூல்களை பதிப்பித்து வெளியிடுவதைத் தலையாயக் கடமையாகக் கொண்டமைந்தன. விவேகானந்தன் பத்திரிகை வேதாந்தத்தை விட சைவ சித்தாந்தத்திற்கே அழுத்தம் கொடுத்தது. சைவ பரிபாலன சபையைப் போல விவேகானந்த சபையும் சைவ சமயப் பரீட்சைகளையும் பண்ணிசைப் போட்டிகளையும் நடாத்தியது.

அதேவேளை விவேகானந்தரின் சிந்தனை வழி பல சமூகப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

* கல்விப் பணி – பாடசாலைகள் அமைத்தல்.
* தானதர்மம் செய்தல் - மடங்களை பிரதேச ரீதியாக அமைத்து அன்னதானம், உடை, இலவசக் கல்வி, உறையுள் முதலானவற்றை அளித்தல்.
* சமூக விழிப்புணர்வு – சாதி வேறுபாடற்ற, சமத்துவமான யாவரதும் கொள்கை களையும் மதிக்கின்ற சிந்தனைக்கு வலுவூட்டுதல்.
* இளைஞர்களை முன்னிலைப்படுத்தல் - இளையவர் சக்தியை நல்வழிப்படுத்தி சமூக நன்மைக்குப் பயன்படுத்துதல்.

இதன்வழி விவேகானந்த சபை, பாடசாலை, பாலர் பாடசாலை அமைத்தும் பரீட்சைகள், போட்டிகள் நடாத்தியும் கல்விப் பணிபுரிய இராமகிருஷ்ண மிஷன் "22" பாடசாலைகளை உருவாக்கி நடாத்தியது. இதன்வழி சைவப் பிள்ளைகள் சைவப் பாரம்பரியத்தோடு ஆங்கிலம், தமிழ், ஆகிய மொழிகளின் வழி கல்வி பயில உதவின. அதேபோல பத்திரிகைகளையும், நூல்களையும் வெளியிட்டு சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தின. இராமகிருஷ்ண மிஷன் பிரதேச ரீதியாக மடங்களை நிறுவியது. உதாரணமாக கதிர்காம மடம், யாத்திரிகர்களுக்கு நன்மை பயப்பதாக அமைந்துள்ளமையைச் சுட்டலாம். மிஷனும் விவேகானந்த சபையும் இளைஞர்களை உள்வாங்கி, கலை, கல்வியளித்ததோடு அவர்களைச் சமூகப் பணியிலும் ஈடுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது.

தொண்ணூறுகளில் விவேகானந்தரின் சிலைகள் பல நாடெங்கிலும் நிலை நிறுத்தப்பட்டமையும் இன்றுவரை அவை வழிபடப்பட்டு வருகின்றமையும் விவேகானந்தர் மீது ஈழத்து சைவர் கொண்டிருக்கும் மதிப்பையும் பக்தியையும் தெளிவுறுத்துகிறது.

### 4. கருத்தியலின் தாக்கம்

இவ்வாறான சுவாமி விவேகானந்தரின் நடத்தையியல் சார்ந்து மட்டுமல்லாமல் கருத்தியல் ரீதியாகவும் ஈழத்துச் சைவர்களிடம் செல்வாக்குச் செலுத்தினார். உதாரணமாகப் பிறப்பிற்கும் உட்படும் ஆத்மனின் நிலையை பின்வருமாறு எடுத்துரைக்கின்றார். "சூறாவளியில் சிக்கி ஒரு கணம் கடலலையில் நுரைந்த உச்சிக்கு தள்ளப்பட்டு அடுத்த கணமே "ஆ" வென்று வாயைப் பிளந்து கொண்டு இருக்கும் பள்ளத்தில் வீழ்த்தப்பட்டு காரணகாரியம் என்னும் நீரோட்டத்தில் அகப்பட்டு அழிந்து போகின்ற சக்தியற்ற பொருளா மனிதன் ......" இவ்வாறாகத் தொடரும் கூற்றை ஒத்து,

"நீர்த்திரையால் இழுப்புண்ட குச்சியொன்று கணமும்

நில்லாது மேலெழுந்தும் கீழ்விழுந்து மலைந்து
சீர்கரையி லெற்றுண்டு கிடந்த செயல் நோக்கிச்

சிந்திக்கின் மானுடர் தம் வாழ்கையிது வென்றேன்"

என விபுலானந்தரின் வரிகள் அமைந்துள்ளன. விவேகானந்தரின் வேதாந்தக் கருத்தியற் புலத்தை நேரடியாக – அப்படியே விதந்துரைக்காமல் சூசகமாகத், தன் ஆக்கங்களில் வெளிப்படுத்தியுள்ளார் என்பதற்கு இது தக்கசான்றாகும்.

மத ஒற்றுமை பற்றிப் பேசிய அவர், அவரவர் மார்க்கம் அவரவர்க்கு உண்மையானதும் சிறந்ததுமாகும் என்கிறார். சுவாமி விவேகானந்தர் எனது மதமும் கடவுளும் உண்மை எனில் மற்றையவர் மதமும் கடவுளும் உண்மை என்கின்றார். பல பாதைகளால் ஓரிடத்தைச் சென்றடைவதைப்போல பல மதங்களின் வழி கடவுளை அடைகின்றோம். அவர் ஒருவரே என்கின்றார். பகுத்தறிவு அல்லது அறிவியலுக்கு முதன்மையளித்து மூடநம்பிக்கைகளைச் சாடுகின்றார். இதுவே இன்றைய உலக அரங்கில் ஆன்மீக தலைவர்களின் ஒட்டுமொத்தக் குரலாக உள்ளது. சத்திய சாயி பாபாவின் சமய சமரச சிந்தனை – சர்வ மத ஒருமைப்பாடு என்பது இதன் வழி வந்ததுவே. சத்திய சாயிபாபாவின் இக்கருத்தியல் ஈழத்தில் பெருஞ்செல்வாக்குற்று காணப்படுவதும் கண்கூடு.

விவேகானந்தர் ஆன்மீகத்திற்கு சிறந்த உபாயமாக முன்வைத்தது தியானத்தையே. இன்று உலக அரங்கிலேயே செல்வாக்குற்றுள்ள தியானம் ஈழத்திலும் செல்வாக்கு மிகுந்ததாக உள்ளது. அவரின் வழிவந்த சிந்தனை வாதிகள் பலர் தியானத்தை முதன்மைப்படுத்துகின்றனர். பிரம்ம குமாரிகள் ராஜயோகத்தை முதன்மைப்படுத்துவதும் இராமகிருஷ்ண மிஷன், வாழக வளமுடன், சின்மயா மிஷன், சத்தியசாயி ஷேவா சங்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்கள் ஆன்மீகம் மற்றும் உலகியல் சார்ந்தும் தியானத்தை முன்னிறுத்து கின்றமையும் குறிப்பிடத்தக்கது. கல்வி கற்கவும் மன அமைதிக்கும் நோய் நொடியின்றி வாழவும் தியானம் வழிசமைக்கும் என்கின்றனர். யோக – தியான வழிநின்று யோகாசனம் சர்வதேசமெங்கும் பரப்பப்படுகிறது. உலகியல் வாழ்வை சிறப்புடன் வாழ உபாயமாகச் சிறந்த யோகாசனம் சுட்டப்படுகிறது.

சுவாமி விவேகானந்தர், வெறும் வழிபாடு கடவுளிடம் உன்னை சேர்ப்பிக்காது என்றும் விஞ்ஞான முறையிலான யோகமும் ஏழையின் சிரிப்பில் இறைவனை காணும் உள்ளமும் தான் ஆன்மீக விடுதலைக்கு வழி என்கிறார். மேலே

சுட்டிய நிறுவனங்களும் ஈழத்தில் இதனை ஓரளவேனும் செய்ய முற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விவேகானந்தரின் வேதாந்தக் கருத்தியல் வெறும் கருத்தியல் ரூபமாக இல்லாது நடைமுறை பிரயோக வேதாந்தமாகவே அவரால் எடுத்தாளப்பட்டது. அதன்வழி உலகியல், ஆன்மீகம் எனும் இருவுளக் கூறுகளினதும் இணைப்பதாக அது உள்ளது. அதனால் தான் அது ஈழத்திலும் பிறதேசங்களிலும் மதம் என்ற எல்லை தாண்டி இன்றுவரை செல்வாக்கும் செலுத்துகிறது.

விவேகானந்தரின் ஈழத்துச் சைவத் தமிழ்ச் சமூகம் பற்றிய கருத்தியல் பின்வருமாறு அமைகின்றது.

“இலங்கையில் வழங்கும் தமிழ் சுத்தமான தமிழாகும். மதமும் கலப்பற்ற தமிழ் மதமேயாகும் பல்லாயிரக் கணக்கான மக்கள் பரவசமாய் ஒருங்கே மறைநூலை ஓதுதலும் சிவனைப் பரவிப் பாடுதலும் ஆயிரக் கணக்கான தாள வாத்தியங்களின் முழக்கமும் இனிய ஓசையும் சிறந்த அடியாரான அனுமனை ஒத்த தோற்றமும் சிவந்த கண்களும் உயர்ந்த ஆகிருதியும் கொண்ட தமிழர்கள் உடல் முழுவதும் நீறுபூசி கழுத்திலே உருத்திராக்க மாலைகளணிந்தும் மெய்மறந்து ஆடுவதும் ஆகிய இவற்றை நேரில் பாராமல் ஒருவரால் புரிந்து கொள்ள இயலாது.”

இக்கூற்று சைவத்தில் ஈழத்தவர் கொண்டிருந்த பற்று நிலையை விவேகானந்தர் தெளிவாகப் புரிந்திருந்தமையைக் காட்டுகிறது. வேதாந்தம் எனும் தலைப்பில் பேசிய விவேகானந்தர் அதன் சாரமாக ஒன்றுபட்ட இந்து சமயத்தையும், தத்துவத்தையும் ஒன்றுபட்ட சமூகத்தையும் பேசியமை இதனாற்றான் போலும்.

**முடிவுரை**

இன்றைய உலகமயமாதற் சூழலில் பல்வேறு நெருக்குதல்களுக்கும், இயந்திர மயமாக்கப்பட்ட வாழ்விற்கும் உட்பட்ட யாவர்க்கும் புத்துணர்ச்சியளிக்கும் சிந்தனையாளராகவே விவேகானந்தர் சுட்டப்படுகிறார். இதன் வழி தமதடையாளத்தையே சர்வதேச தளத்திற்குக் கொண்டு சென்றவராகவும் தனது சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் வெளியற்ற ஒன்றுபட்ட நடைமுறை வாழ்வியலை வாழ்ந்த இளைஞராகவும் துறவியாகவும் அவருடைய வசீகரமான தோற்றப் பொலிவும் வேதாந்த மரபையும் தாண்டி ஈழத்துச் சைவ மரபினர் அவரை நேசிக்க ஏதுவாய் அமைந்திருக்க வேண்டும். இன்றுவரை ஈழத்து சைவ, படித்த மத்திய தரவர்க்கத்திடம் அவரின் தாக்கம் இருந்து வருகின்றது.

இன்று சைவப் பாடசாலைகளிலும் சைவ நிறுவனங்களிலும் இராமகிருஷ்ண பரமகம்ஸர், விவேகானந்தர் போன்றோரின் ஜெயந்தி தினங்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுவருவதும் அவர்களது திருவுருவங்கள் படங்களாக வைத்திருப்பதையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

ஆக, சுவாமி விவேகானந்தரின் வருகை, சிந்தனை – கருத்தியல் என்பன ஈழத்து சைவர்களின் கட்டுறுக்கமான வாழ்வினுள் சில மாற்றங்களை ஏற்படுத்தின. ஈழத்தில் பல் தெய்வ வழிபாடு காணப்பட்டாலும் அவை சைவமயப்படுத்தப்பட்டே காணப்படுவதைப் போல சுவாமி விவேகானந்தரின் வருகையும் கருத்தியலும் சில மாறுதல்களைத் தந்தாலும் கால சுழற்சிக்கு ஏற்ப அவற்றை உள்வாங்கி ஈழத்துச் சைவ மரபு தனித்து நிற்றல் குறிப்பிடத்தக்கது.

உசாத்துணை

நூல்கள்

முத்தையா.நா,1980, பதினெண் சித்தர்கள், ஆத்மஜோதி பதிப்பகம், கொழும்பு.

கணபதிப்பிள்ளை.மு. தென்புலோலியூர் - மகாதேவ சுவாமிகள் நினைவு மலர்,1975,நூற்றாண்டு விழாக்குழு, யாழ்ப்பாணம்.

கழகக்குழு, தவத்திரு வடிவேற் சுவாமிகள் மலர், 1993, திருநெறிய தமிழ் மறைக் கழகம், இணுவில்.

யோகநாதன்.செ,2000, இன்று கேட்கும் குரல், விபுலானந்தர், வெளியீடு ஜெயபாரதி யோகநாதன், யாழ்ப்பாணம்.

ஜெயக்குமார்.ந,2010, மட்டக்களப்பில் அத்வைத சிந்தனையின் தாக்கமும் செல்வாக்கும் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைமாணிப் பட்டத்திற்கான ஆய்வேடு, நூலுருப் பெறாதது)

அம்பிகைபாகன்.ச,1963, இலங்கையில் சுவாமி விவேகானந்தர், நூற்றாண்டு விழாச் சபை, யாழ்ப்பாணம்.

மணி.பெ.சு,1997,இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம், இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு.

விவேகானந்த.சுவாமி, 1997, சுவாமி விவேகானந்தர் யாழ் இந்துக் கல்லூரியில் ஆற்றிய உரை, யாழ் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

விவேகானந்தர்.சுவாமி, 2011, இந்து சமயம், ஸ்ரீ இராமகிருஷ்ண மடம், சென்னை.

தபஸ்யானந்தர், சுவாமி, (ஆங்கிலம்), மங்கையற்கரசி. திருமதி, (தமிழ்), 1999, சுவாமி விவேகானந்தர் வாழ்க்கையும் செய்தியும், ஸ்ரீ இராமகிருஷ்ண மடம், சென்னை.

விவேகானந்தர், சுவாமி, (ஆங்கிலம்), சுந்தர நாராயணன், ஆத்ரேய (தமிழ்), 2000, ராஜயோகம், ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன், சென்னை.

பத்திரிகைகளும், சஞ்சிகைகளும்.

விவேகானந்தன், 1998, சுவாமி விவேகானந்தர் இலங்கை விஜய நூற்றாண்டு நினைவு விழா, விவேகானந்தர் சபை.

அருமைநாயகம்,க,சிவசுப்பிரமணியம்.வி, 1975,அநுராதபுரம் விவேகானந்த சபை பொன்விழா மலர், அநுராதபுரம்.

இந்து சாதனம், 03.02.1897

இந்து சாதனம், 21.03.1897

இந்து சாதனம், 17.02.1897